22

பெரியவருக்காக ஒரு காலைக்காட்சி

சதுரங்கர் சொன்னார்:

என்னைப் பார்த்தால் சினிமா எடுத்தவன் மாதிரியா இருக்கிறது? மூன்று சினிமா எடுத்து எவ்வளவோ ஞானம் வந்த பிறகு கூட எனக்கு சினிமா எடுப்பவனின் பந்தா ஹோதாவெல்லாம் வரவில்லை. அப்படி ஏதாவது அப்போது சிறிது வந்திருந்தால்கூட இந்தப் பத்தாண்டுகளில் எல்லாம் மறைந்து போய் ஏதோ ஓய்வு பெற்ற ஆரம்ப நிலைப் பள்ளி வாத்தியார் மாதிரி ஆகிவிட்டேன். எங்கெல்லாமோ சுற்றி அலைந்து விட்டு அறுபது வயதுக்குப் பிறகு மீண்டும் மைசூரிலேயே வந்து சேர்ந்து விட்டேன்.

போன மாதம் சாமண்ணாவைப் பார்த்தேன். சாமண்ணாவைத் தெரியாது, தங்கமான மனிதர். அவர் நிஜமாகவே வாத்தியாராக இருந்து ஓய்வு பெற்றவர். மகாராஜா கல்லூரியில் முதல்வரான பிறகு அடுத்தபடி பல்கலைக்கழகத் துணைவேந்தராக வேண்டி யதுதான் என்று எதிர்பார்த்திருந்தார். அதுதான் சம்பிரதாயம். ஆனால் தேசத்தில் அரசியல் வாதிகளின் செல்வாக்கு கல்வித் துறையில் பியூனிலிருந்து பிரின்சிபால் வரை ஊடுருவிவிட்டது. அவர் பிரின்சிபாலாகத் தொடர்வதே கஷ்டமாகி விட்டது.

நான்கூட அவரை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. அவர்தான் தெருவில் போகிறவனை நிறுத்தி, "என்ன சதுரங்கா, சௌக்கியமா?" என்று கேட்டார். நாங்கள் தெருவோரமாக ஒதுங்கி வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தோம். இரண்டு வெங்காய மூட்டை, மூன்று பழத்தட்டு, ஐந்து காய்கறிக் கடை, ஒரு கன்றுக் குட்டி, கணக்கில்லாத சைக்கிள்காரர்கள் எங்களை இடித்துப் போனதைக் கூடப் பொருட்படுத்தாமல் பேசிக் கொண்டிருந்தோம். எங்கெங்கோ போன பேச்சு நடுவில், "நீ கூட சினிமா எல்லாம் எடுத்தாயாம். ஒன்றைக் கூடப் பார்க்க அந்த நாளில் நேரம் கிடைக்கவில்லை. அப்படி உழைத்து உழைத்துக் கடைசியில் வேண்டாத சக்கையாக என்னைப் போகச் சொல்லிவிட்டார்கள்" என்று அவர் சொன்னார். எனக்கு வெட்கமாக இருந்தது. சினிமா எடுத்த நாட்களில் பணம் திரட்ட வேண்டும் என்ற ஒரே காரணத் திற்காக எவ்வளவு அயோக்கியர்களுக்கும் முழு மூடர்களுக்கும் அந்த மூலையிலும் இந்த மூலையிலும் பட்டப் பகலிலும் நட்ட நடுநிசியிலும் என் சினிமாக்களைக்காட்ட நான் ஏற்பாடு செய்தி ருக்கிறேன்! பீரும் பிரியாணியும் வந்தவர்களுக்கெல்லாம் நானே என் கைப்படத் தந்திருக்கிறேன்! ஆனால் இந்தக் கல்விமானுக்கு, இந்தத் தங்கமான மனிதருக்கு அவற்றைக் காட்ட வேண்டும் என்று தோன்றவில்லை.

அன்று மாலையே சாமுண்டி பிக்சர்ஸ் யஷ்வந்த்ராஜைப் பார்க்கப் போனேன். நல்லவேளையாக அவன் இருந்தான். ஆனால் நான் ஏதோ பணம் கேட்க வந்திருப்பேனோ என்ற சந்தேகத்தில் அவனுடைய உலகமே முழுகிப் போய்க் கொண்டிருக்கிறது போல அழுது கொண்டிருந்தான்.

"'பரிமளசௌபாக்யா' பிரிண்ட் ஒன்று வேண்டுமே" என்றேன்.

நான் அவனைப் புதிய பிரதி ஒன்றுதான் போடச் சொன்னேன் என்று நினைத்துக் கொண்டு, "அந்த நெகடிவ் எல்லாம் இப்போது எங்கே கிடைக்கும்,சதுரங்கா சார்? அந்த லாபரட்டரி எவ்வளவோ கைமாறி, இடம் கூடமாறிப் போய்விட்டது. பழையது ஒன்றுமே கிடையாது" என்றான்.

"அது இல்லேயப்பா. பழைய பிரிண்ட் நீ எங்காவது வைத்தி ருப்பாயே, அதைத்தான் கேட்டேன். வெறுமனே ஒரு புரொஜக்ஷன் வைத்துக்கொண்டு உன்னிடமே திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்."

அவன் முகம் சற்றுத் தெளிவடைந்த மாதிரி இருந்தது. சட்டென்று உற்சாகமே கூடத் தோன்றியது.

"அதில் டாக்டர் ராஜ்குமார் கூட நடித்திருக்கிறார், இல்லையா?" என்று கேட்டான்.

"ஆமாம். ஆனால் அப்போது அவர் டாக்டர் இல்லை."

"அதில் செத்துப்போய் விடுவார், இல்லையா?"

"ஆமாம். இடைவேளைக்கு முன்னாலேயே டி.பி. வந்து செத்துப் போய்விடுவார்" அந்தப் பாட்டுகூட அந்த நாளில் மிகவும் பிரபலமாயிருந்தது.

யஷ்வந்த்ராஜ் அவனுடைய துடையைத் தட்டிக்கொண்டான். “சதுரங்கா சார்! கவலை வேண்டாம். நானே அதை மார்னிங் ஷோவுக்கு ஏற்பாடு செய்கிறேன். அந்தப் படம் பற்றி மறந்தே போய்விட்டேன்.”

“ஆமாம். ரொம்பப் பேர் மறந்துவிட்டார்கள்.”

அடுத்த வாரமே யஷ்வந்த்ராஜ் ‘கண்டிப்பாக ஒரு வாரம் மட்டும்’ என்று ‘பரிமள சௌபாக்யா’ படத்திற்கு நிறைய விளம்பரம் செய்து ஒரு சுமாரான கொட்டகையில் காலைக் காட்சி ஏற்பாடு செய்துவிட்டான். நான் விளம்பரங்களைப் பார்த்தேனே தவிர அவனிடமிருந்து ஒரு தகவலும் வரவில்லை.

நான் சாமண்ணா வீட்டுக்குப் போனேன். அவர் இம்முறை அவர் வீட்டுக்குக் கிணறு வெட்டிய கதையைச் சொல்ல ஆரம்பித்தார். அறுபது அடி தோண்டித் தண்ணீர் வரவில்லை. பாறைதான் வந்தது. அதை வெடி வைத்து இன்னும் முப்பது அடி தோண்டினார். தண்ணீர் வந்தது. ஆனால் குடிக்கக் கூடியதாக இல்லை. பத்தாயிரம் ரூபாய் தண்டம்..

“பரிமள சௌபாக்யா...” என்று இடை மறித்தேன்.

அவர் கிணறு பெரிய நஷ்டத்தில் முடிந்த போதுதான் பங்களா தேஷ் யுத்தம் வந்தது. யுத்தத்தை அடுத்துத் தேர்தல். ஊர் பேர் தெரியாதவர்கள், ஒழுக்கம் என்றால் அது ‘காயா கிழங்கா’ என்று கேட்கக் கூடியவர்கள் எல்லாம் தலையில் வெள்ளைத் தொப்பி போட்டுக்கொண்டு நாட்டாண்மைக்கு வந்துவிட்டார்கள். கல்லூரியில் ஸ்டிரைக். பஸ் மீது கல்வீச்சு. யார் என்ன செய்தார்கள் என்று ஒரு விசாரணை இல்லை. பிரின்ஸிபாலை சஸ்பெண்டு பண்ணு...

“சார், நீங்கள் ‘பரிமள சௌபாக்யா’ பார்க்க வேண்டும் என்றீர்களே?”

“அது என்ன அது?”

“நான் முதலில் எடுத்த சினிமாப் படம் சார். நாம் மார்க்கெட் அருகே சந்தித்த போது சொன்னீர்களே?”

“ஓகோ. சினிமா. சினிமா. நான் சினிமா பார்த்து எவ்வளவு வருடங்கள் ஆகிறது தெரியுமா? கடைசியாக அந்த பங்கஜ்மல்லிக் படம், அதான் ‘டாக்டர்.’ குஸர்கயா யே ஜமானா, கைஸா, கைஸா...”

நல்ல வேளையாக அவருக்கு அந்த முதல் அடி மட்டும்தான் ஞாபகம் இருந்தது. அதைப்பாடி முடித்தவுடன் நான் விடாப் பிடியாகச் சொன்னேன். “சார், ‘பரிமள சௌபாக்யா’ நாளையி லிருந்து இங்கே பக்கத்திலேயே ஒரு கொட்டகையில் ஒரு வாரம் ஓடப்போகிறது. நாம் ஒருநாள் காலையில் போய்ப் பார்த்து வருவோம்.”

“காலையிலா?” என்று சந்தேகத்துடன் அவர் இழுத்தார்.

“ஒரு நாளைக்கு ஒரு ஆட்டம் மட்டும். காலையில். அதுவே இந்த மாதிரிப் பழைய படங்களுக்குப் பெரிய காரியம்.”

“நீ ‘டாக்டர்’ பார்த்திருக்கிறாயா?”

நான் பார்த்திருந்தேன். ஆனால் உடனே “இல்லை” என்று பதில் சொன்னேன்.

“அது படம்.”

“உங்களுக்கு என்றைக்குச் சௌகரியம் என்று சொல்கிறீர் களோ அன்று காலை நானே வந்து அழைத்துப் போகிறேன்.”

“எங்கே?”

“அதுதான். ‘பரிமள சௌபாக்யா’ படம் பார்ப்பதற்கு.”

“அது என்ன படம்?”

“என் படம் சார். என்னுடைய முதல் படம்.”

‘ஓ, உன்னுடையதா? பார்க்கலாம், பார்க்கலாம். நாளை மாலை பார்க்கலாமா?”

“இல்லை, சார். அது காலைக் காட்சி மட்டும். பத்து மணிக்கு ஆரம்பித்து ஒரு மணிக்கெல்லாம் முடிந்துவிடும்.”

“காலையிலா? என்று இழுத்தார். “சரி, ஞாயிற்றுக்கிழமை பார்க்கலாமா?”

“தாராளமாக. ஞாயிற்றுக்கிழமை பத்து மணிக்கு.”

“லெட்சுமியையும் அழைத்துக் கொண்டு வரலாமா?” அது அவருடைய மனைவியின் பெயர்.

“தாராளமாக. சார், இன்னும் உங்கள் பிள்ளை, குடும்பத்தில் யாராவது பிரியப்பட்டால் அவர்களையும் அழைத்துவாருங்கள்.”

“அப்படியா?”

"அப்போது எவ்வளவு பேருக்கு ஏற்பாடு செய்யட்டும்?"

சாமண்ணா யோசித்தார். "யார் வேண்டுமானாலும் வரலாமா?" என்று கேட்டார்.

"அழைத்துக்கொண்டு வாருங்கள் சார். உங்களுக்கு இல்லாததா?"

"இரண்டு பிள்ளைகளும் அன்று இருக்கமாட்டார்கள். பரவாயில்லை. ஒரு பத்து பேருக்கு இடம் இருக்குமா?"

"பத்து சீட்டா? சரி..."

"எங்கே இருக்கிறது கொட்டகை?"

"நான் வந்து அழைத்துக் கொண்டு போகிறேன், சார்."

"உனக்கு எதற்கு கஷ்டம்?"

"கஷ்டமே இல்லை, சார், நான் வந்து அழைத்துப் போகிறேன். ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணி ஆட்டம்."

நான் நேராக அந்தக் கொட்டகைக்குப் போய் ஞாயிற்றுக் கிழமை காலை காட்சிக்கு சோபா கிளாசில் பத்து டிக்கெட் வாங்கினேன். முப்பத்தாறு ரூபாய். டிக்கெட் கொடுப்பவன் ஒரு முறைக்கு இருமுறை 'காலைக் காட்சிக்கா?' என்று சந்தேகத் துடன்தான் சீட்டுக் கிழித்துக் கொடுத்தான்.

நான் இப்போதெல்லாம் பயன்படுத்துவதில்லை என்றாலும் என் காரை பாட்டரி எல்லாம் சிறிது தேய்த்துப் போட்டு சரி செய்து வைத்தேன். அது *1946* மாடல் மாரிஸ் வண்டி. மிக உயர்ந்த விலையாக ஆயிரம் ரூபாய்க்குத்தான் அதை ரூபின்ஸ் ஆட்டோ மொபைல்ஸ்காரன் என்னிடம் வாங்குவதாகப் போன மாதம் சொன்னான். அது அடிக்கடி நின்று போய்த் தள்ளுவதற்கு நான் கொடுத்த கூலியே ஐயாயிரம் ரூபாய் இருக்கும். நான் விற்க வில்லை.

ஞாயிற்றுக்கிழமை காலை சாமுண்டீசுவரியை வேண்டிக் கொண்டு வண்டியைக் கிளம்பினேன். நேரே சாமண்ணா வீட்டுக் குப் போனேன். சாமண்ணா சாவகாசமாகத் தினப் பத்திரிகைகளின் ஞாயிறு மலர்களைப் படித்துக் கொண்டிருந்தார்.

"போகலாமா, சார்?" என்று கேட்டேன்.

"வண்டி கொண்டு வந்திருக்கிறாயா? அப்போது நிதான மாகப் போகலாமே?"

"போகலாம். ஆனால் படத்தில் முதல் பத்து நிமிஷம் கொஞ்சம் நன்றாக இருக்கும்."

சாமண்ணாவின் மனைவி காபி கொண்டு வந்து தந்தாள். அவர்கள் வீட்டு காபி மிகவும் நன்றாக இருக்கும். அந்த ஒரு தம்ளர் காபியை மூன்று பேருக்குத் தாராளமாக விநியோகிக் கலாம். தாமதம் ஏதும் நிகழக்கூடாது என்று ஒரு பேச்சு பேசாமல் அவ்வளவு காபியையும் குடித்தேன்.

ஒன்பதரை மணிக்கு சாமண்ணாவும் அவருடைய மனைவி யும் தயாராகிவிட்டார்கள். "பாக்கிப் பேர் வரவில்லையா?" என்று கேட்டேன்.

"போகிற வழியில் அழைத்துக்கொண்டு போகலாம். முதலில் பாண்டுரங்க மந்திருக்குப் போவோம்."

அங்கேயுள்ள சாமியார்களை சாமண்ணா அழைத்திருக் கிறாரோ என்று எனக்குக் கவலையாக இருந்தது. என் படத்தில் நகைச்சுவை காட்சிகளே சாமியார்களை வைத்துத்தான்.

ஆடி ஆடிக்கொண்டு என் வண்டி பாண்டுரங்கமந்திர் முன்னால் நின்றது. எனக்கு வயிற்றைக் கலக்கியது. அங்கே நரசிம்மராவ் நின்று கொண்டிருந்தான். என்னைப் பார்த்து, "ஓகோ, நீதான் சாமண்ணா சாரை சினிமாவுக்கு அழைத்துப் போகிறாயா? அவர் ஏதோ சினிமா என்றார். நானும் சரி என்றேன். என்ன படம்?"

"பரிமள சௌபாக்யா!"

"அதுவா? நான் பார்த்து விட்டேனே? அந்த நாளிலேயே அது சரியாக ஓடவில்லை. படம் ரொம்ப சுமார்தான்." நரசிம்மராவ் எனக்குத் தயவு செய்வது போல வண்டியில் ஏறிக் கொண்டான். மணி ஒன்பதே முக்கால்.

"சார், நேரே கொட்டகைக்குத்தானே?" என்று கேட்டேன்.

நரசிம்மராவ் இடைமறித்து, "நம்ம வீட்டுக்குப் போப்பா. அங்கேதான் எல்லாரும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர் களுக்கெல்லாம் மிகவும் ஏமாற்றமாயிருக்கும்."

நான் ஆக்ஸிலேட்டரை நன்கு அழுத்தியபடியே, "என்ன ஏமாற்றம்?" என்று கேட்டேன்.

"ஏதோ புதுப்படம் என்று நினைத்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் வருவார்களோ இல்லையோ."

"நீ போ, சதுரங்கா. அவர்களை நாம் அழைத்துக் கொண்டு போவோம்" என்று சாமண்ணா சொன்னார்.

நான் சந்து பொந்துகளிலெல்லாம் கியரை மாற்றாமலேயே அடித்துப் பிடித்துக்கொண்டு வண்டியை நரசிம்மராவ் வீட்டு முன்னால் நிறுத்தினேன். ஏதோ கல்யாணத்திற்குப் போவது போலப் பட்டுப் புடவையும் பட்டுப் பாவாடையுமாக அவனுடைய குடும்பத்தினர் வண்டியில் ஏறினார்கள். முன் வரிசையிலேயே என்னையும் நரசிம்மராவையும் தவிர அவனுடைய இரு பிள்ளைகளும் ஒரு பெண்ணும். வண்டி கப்பல் போல அப்படியே அழுந்திவிட்டது. சாலையில் ஒரு கல் இடித்தால் போதும். வாட்டர் பம்பு, சைலன்சர் எல்லாம் தனித்தனியாகக் கழண்டுவிடும்.

அப்படியிருந்தும் நான் வண்டியை வேகமாக ஓட்டினேன். சாமண்ணா படத்தின் முதல் பகுதியைத் தவற விடக்கூடாது.

அது ஞாயிற்றுக்கிழமையாக இருந்தாலும் நரசிம்மராவின் வாயில் ஒரே சனியாகவே இருந்தது. "அந்த நாளிலேயே நான் சதுரங்காவிடம் சொன்னேன். அவன்தான் கேட்கவில்லை. உனக் கெதுக்கடா இந்த சினிமா கினிமாவெல்லாம்? எடுத்ததுதான் எடுத்தாய். நன்றாக ஓடும்படி எடுத்தாயா? இப்போதெல்லாம் ராஜ்குமார் படங்கள் எவ்வளவு நன்றாக இருக்கின்றன! ராஜ் குமார் படத்திலேயே அந்த 'பரிமள சௌபாக்யா'தான் ஒரே அழுகைப்படம். சாமண்ணா சார், இவர் எடுத்தபடம் ஒன்றுகூட முழுதாக ஒரு மாதம்கூட ஓடவில்லை. அதற்கு ஏதாவது அவார்டு இருந்தால் சதுரங்காவுக்குக் கொடுக்கலாம்."

நான் வெறி பிடித்தவன் போல வண்டியை ஓட்டினேன். என் ஆயுட் காலத்தில் அவ்வளவு அஜாக்கிரதையாக நான் வண்டியை ஓட்டினதேயில்லை. நரசிம்மராவே கேட்டு விட்டான். "என்னப்பா, எங்களை எல்லாமே கூண்டோடு கைலாசம் அனுப்பப் பார்க்கிறாயா?"

நான் வேகத்தைச் சிறிது குறைத்தேன். நசிம்மராவ் சொன்னான், "நேற்றைக்கு ஒரு ராஜ்குமார் படம் வந்திருக்கிறதே. பார்த்தாயா? ஐம்பதடிக்கு ராஜா மாதிரி ராஜ்குமாருக்கு ஒரு கட்டவுட் வைத்திருக்கிறார்களே, அதற்குத்தான் நான் முதல் காட்சிக்கே போய்விட்டேன். அடடா. என்ன பாட்டு! என்ன டான்ஸு! என்ன சாகஸம்! டெக்னிக் கலரில் எல்லாம் ஒரே பிரமாதமாக இருக்கிறது. நீ அந்த மாதிரி ஏதாவது எடேன், சதுரங்கா. முப்பது, நாற்பது லட்சம் செலவு செய்தாலும் போட்ட பணம் போகாது."

"எடுக்கலாம்" என்று சொல்லி வண்டி வேகத்தை ஒரே யயாக அதிகப்படுத்தினேன். நரசிம்மராவ் அதிர்ஷ்டம் முன்னால் வரிசை யாகக் கட்டை வண்டிகள். என் வண்டியும் கூடவே ஊர்ந்தது.

பத்தே காலுக்குக் கொட்டகைக்குப் போய்ச் சேர்ந்தோம். படம் ஆரம்பிக்கவில்லை. குறைந்த பட்சமாக இருபத்தைந்து பே—ராவது சேரவேண்டும் என்று காத்திருந்தார்கள். ஆனால் பிற்பகல் காட்சியை இரண்டரைக்கு துவக்கியே ஆகவேண்டும். ஆதலால் நாங்கள் போய் உட்கார்ந்து ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் படம் ஆரம்பமாயிற்று. நரசிம்மராவ் விடாமல் பேசிக் கொண்டி ருந்தான். அவனே ஒரு காலத்தில் எனக்கு பார்ட்னராக வருகிறேன் என்று சொன்னது மட்டும் அவனுக்கு நினைவுக்கு வரவில்லை. ஆனால் 'பரிமள சௌபாக்யா' வெளிவந்தபோது யார் யார் எப்படியெல்லாம் என் படத்தைக் கேலி செய்து 'விமரிசனம் எழுதினார்கள் என்று ஒரு வரி விடாமல் ஞாபகம் வைத்திருந்தான். சாமண்ணா படத்தின் முதல் பகுதியைப் பார்த்திருப்பார் என்றுதான் நம்புகிறேன். இடைவேளையில் கொட்டகை விளக்குகள் எரிந்தபோது அவர் தூங்கிக் கொண்டிருந்தார்.

1984